தினமணி

**அறுவடை தொடக்கம்**

First Published : 13 Mar 2010 03:08:10 AM IST

Last Updated : 13 Mar 2010 09:23:53 AM IST

ஆறுமுகனேரி, மார்ச் 12: திருச்செந்தூர், தென்திருப்பேரை வட்டாரத்தில் பிசான பருவ நெல் பயிர் அறுவடைப் பணி துவங்கி நடைபெற்று வருகிறது.

இப் பகுதியில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பயிர் செய்த பிசான நெல் பயிர் தற்போது அறுவடை துவங்கி உள்ளது.

திருச்செந்தூர் வட்டத்தில் செல்லப்பொன்னி என்ற ஆடுதுறை 43 , ஆடுதுறை 45, ஆடுதுறை 47, வெள்ளை சம்பா என்ற அம்பை 16, கட்ட சம்பா என்ற டிகே.எம் 9 என்ற நெல் பயிர்கள் பயிர் செய்திருந்தனர்.

தற்போது இப்பிசான பருவ அறுவடைப் பணி நல்லூர், மூலக்கரை, கானம், வீரமாணிக்கம், அம்மன்புரம், சோனகன்விளை மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் நடைபெற்று வருகிறது.

சுமார் 1400 ஹெக்டேர் பரப்பில் விவசாயம் நடைபெற்று பத்து சதவீதத்துக்கு மேல் அறுவடை நடைபெற்றுள்ளது. சராசரியாக ஒன்றரை மேனி வரை மகசூல் கிடைத்துள்ளதாக தெரிகிறது.

தென்திருப்பேரை வட்டாரத்தில் சுமார் 3000 ஹெக்டேரில் ஆடுதுறை 43, ஆடுதுறை 45, அம்பை 16, ஆடுதுறை 36 ஆகிய நெற் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் பத்து சதவீதம் அறுவடை நடைபெற்றுள்ளது. தற்போது தென்திருப்பேரை வட்டாரத்தில் வெள்ளமடம், நாசரேத், உடையார்குளம், ஆவ்வார்திருநகரி, ஆதிநாதபுரம், குருகாட்டூர் மற்றும் ராஜபதி உள்ளிட்ட பகுதியில் அறுவடை நடைபெற்று வருகிறது. ஒன்றரை மேனி அதாவது ஒரு ஹெக்டேருக்கு சுமார் 6075 கிலோ வரை மகசூல் கிடைத்து வருவதாக கூறப்படுகிறது.

படைப்புழு தாக்கிய பகுதிகளில் 5 சதவீதம் வரை மகசூல் குறைந்துள்ளதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். இப் பகுதியில் சுமார் ஒரு மாதம் வரை அறுவடைப் பணி நீடிக்கலாமென தெரிகிறது.

**கர்நாடக விவசாயிகளை இஸ்ரேல் அழைத்து செல்ல திட்டம்**

First Published : 13 Mar 2010 12:49:55 AM IST

பெங்களூர், மார்ச் 12: வெளிநாட்டு விவசாய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளகர்நாடக விவசாயிகள் இஸ்ரேல் நாட்டுக்குச் செல்கிறார்கள்.

÷சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை விவசாயத் துறை அமைச்சர் ரவீந்திரநாத் இதுகுறித்து கூறியதாவது:÷வெளிநாடுகளில் உள்ள விவசாய முறைகளை அறிந்து கொள்ள வசதியாக கர்நாடக அரசு விவசாயிகளை கடந்த ஆண்டு முதல் சீனா நாட்டுக்கு அனுப்பி வருகிறது. இதுவரை 633 விவசாயிகள் சீன நாட்டுக்கு சுற்றுப்பணம் மேற்கொண்டுள்ளனர். இதற்காக அரசு ரூ.3.59 கோடி செலவிட்டுள்ளது. இந்த ஆண்டும் சீனாவுக்கு விவசாயிகள் அனுப்பிவைக்கப்படுவார்கள். இதன் தொடர்ச்சியாக இஸ்ரேல் நாட்டுக்கு நமது விவசாயிகளை அனுப்ப அரசுத் திட்டமிட்டுள்ளது.÷விவசாயிகள் அந் நாட்டு விவசாய தொழில்நுட்பங்களை அறிந்து அவற்றை இங்கு செயல்படுத்த தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார் அவர்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

First Published : 13 Mar 2010 06:59:44 AM IST

தருமபுரி, மார்ச் 12: தருமபுரி மாவட்டத்தில் விளையும் சம்பா நெல்லை நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யவதற்காக தருமபுரி, அரூர் மற்றும் பாலக்கோடு பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஆட்சியர் பெ.அமுதா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் அறுவடை செய்யப்படுகிறது.

நெல் விற்பனை செய்யும் விவசாயிகளிடம் நேரடியாக சென்று தரம் நிர்ணயம் செய்யப்பட்டு, நேரடி நெல் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

17 சதவிகிதம் ஈரப்பதம் கொண்ட சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,100-ம், மோட்டா ரக நெல்லுக்கு ரூ.1,050-ம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

உற்பத்தி செய்யும் நெல்லை காயவைத்து கல், மண் மற்றும் தூசி நீக்கி பாதுகாக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு தருமபுரி உதவி தரக்கட்டுப்பாடு அலுவலர் 04342- 230951 தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளலாம்.

**விவசாய உற்பத்திக்கு கை கொடுக்கும் தொழில்நுட்பம், இயந்திரங்கள்**

First Published : 13 Mar 2010 06:04:15 AM IST

திருச்சி, மார்ச் 12: தொழில்நுட்பமும், இயந்திரங்களின் பயன்பாடும் விவசாய உற்பத்திக்கு கை கொடுக்கின்றன என்றார் திருச்சி மாவட்ட ஆட்சியர் தா. சவுண்டையா.

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பாக 10 மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகியவற்றின் அலுவலர்கள் பங்கேற்ற பயிலரங்கில் அவர் மேலும் பேசியது:

ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் விவசாயிகளின் தொழில்நுட்பத் திறனை அதிகரிக்கச் செய்வதற்காக மாவட்ட, கிராம அளவிலான பயிற்சிகள், புதிய தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு பிற மாவட்டங்களில் விவசாயம் சிறப்பாகச் செயல்படும் இடங்களுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று வருதல், செயல்விளக்கங்கள் செய்து காட்டுதல், விவசாயிகள் - ஆராய்ச்சியாளர்கள் கலந்துரையாடுதல், தொழில்நுட்பச் செய்திகள் அடங்கிய பிரசுரங்கள் வெளியிடுதல், வயல் தின விழா, பண்ணைத் தொழில்நுட்ப ஆலோசனை மையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாய உற்பத்தி நிலப்பரப்பு முன்பு இருந்த அளவுக்கு இல்லாமல் குறைந்தாலும், உற்பத்தி இலக்கு குறையாமல் இருக்கிறது. விவசாயத்தில் நவீன உத்திகளைக் கடைப்பிடிப்பதால்தான் உற்பத்தியை அதிகரிக்க முடிகிறது. வேளாண்மைப் பணிகள் மேற்கொள்ள விவசாயிகளின் குடும்பங்களைச் சேர்ந்த படித்தவர்களே முன்வருவதில்லை.

வேளாண் பணிகளுக்கு ஆள்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. விவசாயத்தில் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவதாலும், ஆள்கள் பற்றாக்குறையைப் போக்க இயந்திரங்களைப் பயன்படுத்துவதாலும் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும்' என்றார் சவுண்டையா.

கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் என். பொன்னுசாமி, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பொன்னுசாமி, தேசிய அளவிலான ஆத்மா திட்ட ஊக்குநர் சங்கசுப்பிரமணியம் உள்ளிட்டோர் பேசினர்.

இந்தக் கூட்டத்தில் கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகை, திண்டுக்கல், நாமக்கல் ஆகிய 10 மாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். வேளாண் துணை இயக்குநர் எஸ். சிவராஜ் வரவேற்றார். எம்.ஆர். ராமநாதன் நன்றி கூறினார்.

**பயிர்சாகுபடியைப் பாதுகாக்க மும்முனை மின்சாரம்**

First Published : 13 Mar 2010 02:44:04 AM IST

திருப்பூர், மார்ச் 12: பயிர் சாகுபடியைப் பாதுகாக்க விவசாயத்துக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, திருப்பூரில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமையில் திருப்பூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி கே.வி.முரளிதரன் முன்னிலை வகித்தார்.

"அரசு கொப்பரை கொள்முதல் நிலையங்கள் மூலம் கொப்பரை மட்டுமே கொள்முதல் செய்வதால் அதன் முழுபலன்களும் வியாபாரிகளுக்கே சென்றடைகிறது. விவசாயிகளும் இதன்மூலம் பலன்பெற கொப்பரைக்குப் பதிலாக தேங்காய்களை கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோடைகாலம் துவங்கி விட்டதால் கால்நடைகளை வாய்ச்சப்பை, அம்மை நோய்கள் அதிகளவில் தாக்கி வருகிறது. இதைத் தடுக்க மாவட்டம் முழுவதும் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். பொங்கலூர் பகுதியில் வாய்ச்சப்பை நோயால் பாதிக்கப்பட்டு 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்துள்ளன. அதற்கு நஷ்டஈடு தர உரிய அரசு திட்டம் இல்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆடுகள் வாங்க வங்கிகள் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் உள்ள கால்நடை மருத்துவமனை கிளைகள் பெரும்பாலும் பூட்டிவைக்கப்பட்டுள்ளன. இதன் பாதிப்பை உணர்ந்து நடமாடும் கால்நடை மரு த்துவமனை அமைக்கவும், கிராமப்புற கால்நடை மருத்துவமனைகளுக்கு போதிய ஆட் களை நியமிக்கவும் வேண்டும்.

திருப்பூர் சாய ஆலைகளுக்கு மத்திய அரசு ரூ.200 கோடியும், மாநில அரசு ரூ.120 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு இதுவரை கிடைக்கவில்லை. இதை முறைப்படுத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் இழப்பீடு கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பயிர்களைப் பாதுகாக்க மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

சர்க்கரை விலை குறைய கரும்பு நடவை அதிகமாக்க வேண்டும். அதன்படி, கரும்பு நடவு அதிகரிக்க கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ.2,500 வழங்க மாநில அரசு வழிவகை செய்ய வேண்டும்' என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் தெரிவித்தனர். கூட்டுறவு இணைப் பதிவாளர் ராமமூர்த்தி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) எல்.சங்கரராஜ், உதவி இயக்குநர் செரீஃப் பங்கேற்றனர்.

**மார்ச் 19-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

First Published : 13 Mar 2010 07:05:57 AM IST

வேலூர், மார்ச் 12: வேலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மார்ச் 19-ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் செ.ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று தங்கள் குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம் என்று ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பட்டுப்புழு மனைக்கு ரூ. 7.50 லட்சம் மானியம்**

First Published : 13 Mar 2010 02:10:16 AM IST

நாமக்கல், மார்ச் 12: நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு மனைக்கு மானியமாக ரூ. 7.50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.
பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில், பட்டுப்புழு வளர்ப்போருக்கு பல்வேறு வகையான சலுகைகள், மானியம், கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக கிரியா ஊக்கத் திட்டத்தின் கீழ் மனை அமைப்பதற்காக அரசு மானியம் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டு விவசாயிகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் ரூ. 7.50 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மனை அமைப்பதற்கான ரூ. 1.50 லட்சம் செலவுத் தொகையில் 50 சதவீதத்தை அரசே மானியமாக வழங்குகிறது. இதன்படி, 10 விவசாயிகளுக்கு தலா ரூ. 75 ஆயிரம் வீதம் ரூ. 7.50 லட்சத்துக்கான காசோலைகளை ஆட்சியர் சகாயம் வெள்ளிக்கிழமை வழங்கினார். மேலும், அரசு மானியப் பொருட்களாக 2 நபர்களுக்கு ரூ. 60 ஆயிரம் மதிப்பில் பொருட்கள் வழங்கப்பட்டன.
நிகழ்ச்சியில், பட்டுவளர்ச்சித் துறை உதவி இயக்குநர் சு. கோபால்சாமி மற்றும் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 13 Mar 2010 02:09:46 AM IST

சேலம், மார்ச் 12: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 73.79 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,192 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 2,100 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 36.45 டி.எம்.சி.

**கரும்பு கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி விவசாயிகள் உண்ணாவிரதம்**

First Published : 13 Mar 2010 07:03:03 AM IST

திருவண்ணாமலை, மார்ச் 12: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2000-மும், நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1500-ம் வழங்க வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் திருவண்ணாமலை கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் நடைபெற்றது.
அருணாச்சலம் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகை ரூ.11 கோடியை உடனே தர வேண்டும்.
கரும்பு டன் ஒன்றுக்கு 8.5 சதம் ரெக்கவரிக்கு ரூ.2000 விலை நிர்ணயிக்க வேண்டும், வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். சர்க்கரை ஆலைகளின் லாபத்தில் சரிபாதியை விவசாயிகளுக்கு தர வேண்டும், விவசாய பயிர்களுக்கு தனி நபர் காப்பீடு தர வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடந்த உணணாவிரதப் போராட்டத்துக்கு மாவட்டத் தலைவர் எஸ்.பலராமன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் பெ.அரிதாசு, கே.பாலமுருகன், என்.கோவிந்தராஜ் முன்னிலை வகித்தனர். மாநில துணைத் தலைவர் எஸ்.தயாநிதி துவக்கவுரை ஆற்றினார்.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் டி.ஏழுமலை, சிபிஎம் மாவட்டச் செயலர் எம்.வீரபத்திரன், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் எம்.சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். எம்.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

மொட்டை அடித்துக் கொண்ட விவசாயிகள்: கரும்பு விவசாயிகளின் அவல நிலை தொடர்பாக தமிழக அரசு விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் 10 பேர் மொட்டை அடித்துக் கொண்டனர்.

**பருவநிலை மாற்றத்தால் கடலில் மூழ்கும்தீவுகள்**

First Published : 13 Mar 2010 02:47:16 AM IST



தூத்துக்குடி, மார்ச் 12: மாறி வரும் பருவநிலை உள்ளிட்ட காரணங்களால் மன்னார் வளைகுடாவில் உள்ள 21 தீவுகளும் காணாமல் போகும் அபாயம் உருவாகியுள்ளது. 2 தீவுகள் ஏற்கெனவே கடலில் மூழ்கிவிட்டன. மற்ற தீவுகளின் பரப்பளவும் வேகமாக சுருங்கி வருகிறது.

இதைத் தடுத்து தீவுகளைக் காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

÷உலக முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் உயிர்ப் பல்வகைமைகளுக்கு மன்னார் வளைகுடா புகலிடமாக உள்ளது. கடல்வாழ் உயிரினங்களை பொருத்தவரை இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகளவில் வளமான பகுதியாக கருதப்படுகிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மத்திய அரசு மன்னார் வளைகுடாவை பாதுகாக்கப்பட்ட கடல்வாழ் உயிரின தேசிய பூங்காவாக 1980-ல் அறிவித்தது.

560 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ள மன்னார் வளைகுடா தேசிய பூங்காவில் 0.25 ஹெக்டேர் முதல் 125 ஹெக்டேர் அளவிலான 21 தீவுகள் அமைந்துள்ளன. இந்த தீவுகளை சுற்றிலும் மீன்களின் இருப்பிடமாகத் திகழும் பவளப் பாறைகள் அதிகளவில் காணப்படுகின்றன. 104 வகை கடின பவளப்பாறைகள் மன்னார் வளைகுடா பகுதியில் காணப்படுகின்றன.

இதைத் தவிர இந்திய கடலோரப் பகுதியில் காணப்படும் 2,200 மீன் இனங்களில் 450 இனங்கள் அதாவது 20 சதவீதம் மன்னார் வளைகுடா பகுதியில் காணப்படுகின்றன.

÷79-க்கும் மேற்பட்ட கணுக்காலிகள், 108 வகை புரையுடலி இனங்கள், 260 வகை மெல்லுடலி இனங்கள், 100 வகை முள்தோலிகள், 147 வகை கடல் பாசிகள், 160 வகை கடல் பறவை இனங்கள் என ஏராளமான அரிய கடல்வாழ் உயிரினங்களின் புகலிடமாக இப்பகுதி விளங்குகிறது.

இந்த பூங்காவின் முக்கிய அங்கமாக விளங்குபவை இங்குள்ள வான்தீவு, காசுவார் தீவு, காரைச்சல்லி தீவு, விலங்குசல்லி தீவு, உப்புத்தண்ணி தீவு, புலுவினிசல்லி தீவு, நல்ல தண்ணி தீவு, ஆனையப்பர் தீவு, வாலிமுனை தீவு, அப்பா தீவு, பூவரசன்பட்டி தீவு, தலையாரி தீவு, வாழை தீவு, முள்ளி தீவு, முயல் தீவு, மனோலி தீவு, மனோலிபுட்டி தீவு, பூமரிச்சான் தீவு, புள்ளிவாசல் தீவு, குருசடை தீவு, சிங்கில் தீவு ஆகிய 21 தீவுகளும்தான். இதில், தூத்துக்குடி குழுவில் 4 தீவுகள், வேம்பார் குழுவில் 3 தீவுகள், கீழக்கரை குழுவில் 7 தீவுகள், மண்டபம் குழுவில் 7 தீவுகள் அமைந்துள்ளன. இந்த தீவுகள் கடல் சூழலில் முக்கியமான அங்கமாக இருப்பதோடு, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளுக்கு பெரும் பாதுகாப்பு அரணாக அமைந்துள்ளன. இயற்கைச் சீற்றங்கள் பெரிய அளவில் கடற்கரையை தாக்காத வண்ணம் தடுப்பு அரண்களாக இவை செயல்படுகின்றன. இதனால்தான் 2004-ல் ஏற்பட்ட சுனாமி பேரலை தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளை பெரிய அளவில் தாக்கவில்லை.

கடல் சூழலிலும், கடற்கரை பாதுகாப்பிலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த தீவுகள் அண்மைக்காலமாக பெரும் ஆபத்தை சந்தித்து வருகின்றன. பருவநிலை உள்ளிட்ட காரணங்களால் தீவுகளின் நிலையும் மாறி வருகிறது. ÷கடந்த சில ஆண்டுகளில் தூத்துக்குடி குழுவில் உள்ள விலங்கு ல்லி தீவு, கீழக்கரை குழுவில் உள்ள பூவரசன்பட்டி ஆகிய 2 குட்டி தீவுகளும் கடல் மட்டத்தை விட தாழ்ந்து, மூழ்கத் தொடங்கி விட்டன. மன்னார் வளைகுடாவில் உள்ள 21 தீவுகளிலும் இந்த இரு தீவுகளும்தான் மிகச் சிறியவை. மற்ற தீவுகளின் பரப்பளவும் வேகமாக குறைந்து வருகிறது. இதே நிலை நீடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் 21 தீவுகளும் காணாமல் போகும் நிலை உருவாகும் என அச்சம் தெரிவிக்கிறார் இந்த பகுதியில் ஆய்வு நடத்தி வருபவரும், நிலத்தியல் துறை நிபுணருமான என்.கிளாட்வின் ஞான ஆசீர்.
இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:
40 ஆண்டுகளுக்கு முன்பு பவளப்பாறைகள் பெருமளவில் சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்டதே இந்த நிலைக்கு காரணம். தற்போது பவளப்பாறை வெட்டி எடுப்பது முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. ÷
இருந்தபோதிலும், ஏற்கெனவே இழந்த பவளப்பாறைகளுக்கு மாற்று இன்னும் உருவாகவில்லை. சல்லி வகை பவளப்பாறைகள் ஆண்டுக்கு 10 முதல் 12 செ.மீ. அளவுக்குத்தான் வளரும். பாறை வகை பவளப்பாறைகள் ஆண்டுக்கு 1 செ.மீ. அளவுக்குத்தான் வளரும். ÷கடந்த சில ஆண்டுகளில் பவளப்பாறை பரப்பு அதிகரித்துள்ள போதிலும், ஏற்கெனவே இழந்த பகுதிகளுக்கு இணையாக இன்னும் வரவில்லை. உலக வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் பவளப்பாறை வளர்ச்சி குறைவாகவே இருக்கிறது.

தீவுகளை சுற்றி சில கி.மீ. தொலைவுக்கு இந்த பவளப்பாறைகள் இருக்கும். அலைகள் நேரடியாக தீவுகள் மீது மோதுவதை இந்த பவளப்பாறைகள் தடுக்கும். தற்போது பவளப்பாறைகள் குறைந்ததால் அலைகள் நேரடியாக தீவுகள் மீது மோதுகின்றன. இதனால், தீவுகளின் பரப்பளவு சுருங்கி வருகிறது. மேலும், தீவுகள் நகரவும் தொடங்கியுள்ளன. தூத்துக்குடி மற்றும் வேம்பார் குழுவில் உள்ள தீவுகள் கரையை நோக்கியும், கீழக்கரை மற்றும் மண்டபம் குழுவில் உள்ள தீவுகள் கடலை நோக்கியும் நகரத் தொடங்கியுள்ளன. தீவுகளில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்களால் மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு, அவை வேறு இடங்களுக்கு நகர்ந்து சென்றுவிட்டன. இதனால், கடல் வளம் குறைந்து வருகிறது.

÷மேலும், தீவுகளின் பரப்பளவு குறையக் குறைய புயல், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் கடற்கரையை தாக்கும் அபாயம் உள்ளது. எனவே, இதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்க

வேண்டும். பவளப்பாறை வளத்தை அதிகரிக்க பவளப்பாறை மறு உருவாக்குதல் தொழில்நுட்பம் பல நாடுகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.
÷இந்த பகுதியிலும் சோதனைகள் நடத்தி வெற்றி காணப்பட்டுள்ளன. அந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பவளப்பாறைகளை அதிகளவில் உருவாக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**மின் வினியோகத்தில் சிக்கல் நீடிப்பு விவசாய நிலங்களில் பயிர்கள் பாதிப்பு : விவசாயிகள் அதிருப்தி!**

பொள்ளாச்சி:

தேவைகளுக்காக வழங்கப்பட்ட மின் இணைப்பில் போதிய மின் வினியோகம் இல்லாததால் விளைநிலங்களில் தண்ணீர் பாய்ச்ச முடிவதில்லை; வெயில் காரணத்தால் பயிர்கள் கருகி பாதிக்கப்படும் சூழல் உள்ளதால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.பொள்ளாச்சி சுற்றியுள்ள பகுதியில் மானாவாரி பயிர்கள் மட்டுமின்றி தென்னை சாகுபடியும் அதிகளவில் உள்ளது. பெரும்பாலான விவசாயிகள் விளைநிலங்களில் கிணறுகளை வெட்டி, மின்மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சுகின்றனர்.

விவசாயத்தேவைகளுக்காக "த்ரீ - பேஸ்டு லைன்' மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. "ஷிப்ட்' முறையில் தினமும் ஆறு மணி நேரத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.ஆனால், திவான்சாபுதூர், மீனாட்சிபுரம், அம்பராம்பாளையம், திம்மங்குத்து மற்றும் ராமப்பட்டிணம் உட்பட மேற்குப்பகுதிகளில் மும்முனை இணைப்பில் ஒன்று அல்லது இரண்டு லைன்களில் மட்டுமே மின் வினியோகம் உள்ளது. தற்போது கோடை சீசன் துவங்கிய நிலையில், போதிய சப்ளையின்றி விளைநிலங்களில் தண்ணீர் பாய்ச்ச முடியாததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது:ஏற்கனவே, மின்பற்றாக்குறையை சமாளிக்க தினமும் இரண்டு மணி நேரத்திற்கு "லோடு ஷெட்டிங்' என்ற பெயரில் வினியோகம் தடையாகிறது. இதுதவிர அடிக்கடி திடீரென மின்வினியோகம் தடை செய்யப்படுகிறது. மட்டைகள் வயர் மேல் விழுவதால் சரிபார்ப்பு பணிக்காக அடிக்கடி மின்தடை உண்டாகிறது என அதிகாரிகள் விளக்கம் அளிக்கின்றனர். அப்போது, எதற்காக மாதாந்தோறும் ஒருமுறை மரக்கிளைகளை வெட்டுவதற்காக மின்வினியோகம் தடை செய்யப்படுகிறது.போதிய சப்ளையில்லாததால் தொடர்ச்சியாக 15 நிமிடங்களுக்கு கூட, மோட்டார் மூலம் விளைநிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடிவதில்லை. சில நிமிட இடைவெளியில் அடிக்கடி மின்வினியோகம் தடையாவதால், பம்புகளை இயக்க முடியாமல் அவதிப்படுகிறோம். தற்போது வெயில் காரணமாக விளைநிலங்களில் போதிய தண்ணீர் பாய்ச்சாவிட்டால் பயிர்கள் கருகி மகசூல் பாதிக்கப்படும். குறைதீர்ப்பு முகாமில் பலமுறை புகார் அளித்தும் எவ்வித பலனுமில்லை. உடனடியாக பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், போராட்டத் தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.மாணவர்களும் அவதி: "சின்னாம்பாளையத்தில் தினமும் காலை 6.00 முதல் 8.00 மணி வரை மின் வினியோகம் தடை செய்யப்படுகிறது. தற்போது பொதுத்தேர்வு நடப்பதால், மாணவர்கள் அதிகாலையில் எழுந்து படிக்கின்றனர். கடைசி நேரத்தில் படித்த பாடங்களை திருப்பி பார்க்க வேண்டியுள்ளது. ஆனால், 6.00 மணிக்கு மின்வினியோகம் தடையாவதால், போதிய வெளிச்சமின்றி மாணவர்கள் படிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.எனவே, பொதுத்தேர்வை முன்னிட்டு தற்காலிகமாக மின்வினியோகம் தடையாகும் நேரத்தை மாற்றியமைக்க வேண்டும்' என்று வீட்டு வசதி வாரிய குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இயற்கை பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க கோரிக்கை**

நத்தம்": "மா' சீசனில் இய ற்கை அழிவால் ஏற்படும் பாதிப் பிலிருந்து பாதுகாக்க விவசாயிகளை காப்பீடு திட்டத் தில் சேர்க்க வேண்டும்.திண்டுக்கல் மாவட்டத் தில் நத்தம்,சாணார்பட்டி ஒன்றியங்களில் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் மா சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இங்கு மாசி முதல் ஆடி வரை மா சீசன் ஆகும். சில ஆண்டு தேவைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மழை பெய்யும் போது மரங்களில் இயற்கை மாற்றத்தினாலும், நோய்கள்,அதிகளவு தளிர்வு ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படும்.இத்தகைய இயற்கை அழிவுகளால் விவசாயிகள் பாதிக் கப்படுவது தொடர்கிறது. மா உற்பத்தியில் நஷ்டம் அடையும் விவசாயிகளை காப்பாற்ற விவசாய காப்பீட்டுத் திட்டத் தில் முழு அளவில் விவசாயிகளை சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந் துள்ளது.

**பூண்டு சீஸன் ஆரம்பம்: விலை 40 ரூபாயாக சரிவு**

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டில் பூண்டு சீஸன் துவங்கியதால் பூண்டு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. நாட்டுப்பூண்டு ஒரு கிலோ 40 ரூபாய், மலை பூண்டு ஒரு கிலோ 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஈரோடு நகரில் கொங்கலம்மன் கோவில் எதிரில் பூண்டு மொத்த வியாபாரம் செய்யும் குடோன்கள் உள்ளன. இங்கிருந்து ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த கடைக்காரர்கள் மற்றும் தள்ளு வண்டிக்காரர்கள் பூண்டு வாங்கிச் செல்கின்றனர். ராஜஸ்தான், மத்திய பிரதேசம், குஜராத் மாநிலங்களில் இருந்து நாட்டு பூண்டு, ஹிமாச்சலபிரதேசம், ஊட்டி, கொடைக்கானால் பகுதியில் இருந்து மலைப்பூண்டு கொண்டு வரப்படுகிறது. சென்றாண்டு இறுதியில் ஈரோடு மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து குறைந்து காணப்பட்டது. ஒரு கட்டத்தில் துவரம்பருப்பு விலையும், பூண்டு விலையும் போட்டி போட்டன. இறுதியில் பூண்டு வரத்து குறைந்து பூண்டு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்தது. நாட்டு பூண்டு ஒரு கிலோ 100 முதல் 120 ரூபாய், மலைப்பூண்டு ஒரு லோ 140 முதல் 150 ரூபாய் வரை விற்கப்பட்டது. சென்ற சில நாட்களாக ஈரோடு மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து அதிகரிக்க துவங்கியதால் விலை வீழ்ச்சி அடையத் துவங்கியது. நாட்டு பூண்டு ஒரு கிலோ 40 முதல் 60 ரூபாய், மலைப்பூண்டு 70 முதல் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

நாட்டு பூண்டு கிலோவுக்கு 60 ரூபாய் வரையும், மலைப்பூண்டு கிலோவுக்கு 70 ரூபாய் வரையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. வரும் காலங்களில் பூண்டு வரத்து அதிகரிக்கும் என்பதால் விலை மேலும் வீழ்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது. வியாபாரிகள் கூறியதாவது: சென்றாண்டு ஜூன் மாதத்தில் பூண்டு சீஸன் துவங்கியது. சீஸன் நேரத்தில் பூண்டு விலை ஒரு கிலோ 20 ரூபாய் ற்கப்பட்டது. உரிய விலை கிடைக்காததால், பூண்டு பயிரிடும் விவசாயிகள் சாகுபடியை குறைத்தனர். சாகுபடி குறைந்த காரணத்தால் சென்ற ஆண்டு இறுதியில் பூண்டு விலை வரலாறு காணாத வகையில் ற்கப்பட்டது. வாரத்துக்கு மூன்று முறை மட்டுமே ஈரோடுக்கு பூண்டு வரத்தானது. தற்போது தினசரி லோடு

வந்து கொண்டிருக்கிறது. விலை வீழ்ச்சியடைவதால் விற்பனையும் நன்றாக உள்ளது. வரும் காலங்களில் பூண்டு சீஸன் துவங்கும் என்பதால் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நெல்லிக்காய் வரத்து அதிகரிப்பு**

ஈரோடு: ஈரோடு நகரில் வைட்டமின் "சி' பற்றாக்குறையை போக்கும் பெரிய நெல்லிக்காய் விற்பனை அதிகரித்துள்ளது. நெல்லி மரத்தின் இலை, வேர், காய், விதை, வேர், பட்டை என அனைத்துமே மருத்துவ குணம் கொண்டவை. சித்த மருத்துவர்கள் நெல்லிக்காயை போட்டி போட்டு வாங்குகின்றனர். நெல்லிக்காயை ஊற வைத்து பொடி மசால் செய்து விற்பனை செய்பவரும் உண்டு. நெல்லிக்காய் ஊறுகாய், ஜாம் ஆகியவையும் தயாராகிறது. தற்போது பெரிய நெல்லிக்காய் வரத்து அதிகரித்துள்ளது. மைசூரு நெல்லிக்காய் ஈரோட்டில் குவிந்துள்ளது. சீஸன் இல்லாத நேரத்தில் ஒரு கிலோ பெரிய நெல்லிக்காய் 120 ரூபாய்க்கு விற்கப்படும். தற்போது ஒரு கிலோ பெரிய நெல்லிக்காய் 85 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கோவை, சேலம், கிருஷ்ணகிரி, மேட்டூர், மேச்சேரி, ஏற்காடு ஆகிய இடங்களில் இருந்தும் நெல்லிக்காய் விற்பனைக்கு வருகிறது. சர்க்கரை நோயாளிகள் அதிகம் இந்த காய்களை வாங்கி செல்கின்றனர். இன்னும் ஒரு மாதத்துக்கு நெல்லிக்காய் வரத்து அதிகம் இருக்கும்.

**தீவனத்தட்டுப்பாட்டால் கால்நடை விற்பனை அதிகரிப்பு**

ஈரோடு: தமிழகம் முழுவதும் வெயிலின் தாக்கம் அதிகரிப்பால் கால்நடைகளுக்கான தீவனத்தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஈரோட்டில் நடந்த மாட்டுச்சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்துள்ளதால் விலையும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தைக்கு, புளியம்பட்டி, பொள்ளாச்சி, திருப்பூர், கொடைக்கானல், உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம், காங்கேயம், கோவை, உப்புடமங்கலம், அவினாசி, கருமத்தம்பட்டி, செங்கப்பள்ளி, கோபி, சத்தி உள்பட பல்வேறு பகுதியில் இருந்து பசுமாடுகள், எருமை மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஜெர்சி, சிந்து, நாட்டுகிராஸ், சிந்து கிராஸ், சீமை, சுகந்தினி, செச்செப், பிளாக் அண்ட் ஒயிட் ஆகிய மாடுகளும், எருமை மாட்டில் முரா, நாட்டு கிராஸ் ஆகிய ரகங்களும் வருகின்றன. தமிழகம் முழுவதும் கோடை வெப்பம் அதிகரித்து வருவதால் தீவனத்தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. மாட்டுத் தீவனங்களான புல், சோளம், கேழ்வரகு, பிண்ணாக்கு ஆகியவற்றின் விலையும் உயர்ந்து வருகிறது. மாட்டுத் தீவனத்தின் விலை உயர்வாலும், தட்டுப்பாடு ஏற்படுவதாலும் விவசாயிகள் பலரும் கால்நடைகளை விற்கத் துவங்கியுள்ளனர். இதன் காரணமாக வழக்கமாக சந்தைக்கு வரும் மாடுகளின் எண்ணிக்கையை விட நேற்றைய சந்தையில் கூடுதலான மாடுகள் வந்தன. மாடுகளின் வரத்து அதிகரிப்பால் விலை 1,000 முதல் 2,000 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.
மாட்டு வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு சந்தையில் இருந்து வாரந்தோறும் கர்நாடகா மாநிலத்துக்கு 50 லோடு, கேரளாவுக்கு 15 லோடு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு 20 லோடு மாடுகள் செல்கின்றன. தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கோடை வெயில் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் தீவனத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாட்டு தீவனங்களான பிண்ணாக்கு, சோளம், கேழ்வரகு, புல் விலை உயர்ந்துள்ளது. தீவனப்பற்றாக்குறை காரணமாக மாடு வளர்ப்பவர்கள் பலர் மாடுகளை விற்று வருகின்றனர். விவசாய நிலங்கள் வைத்துள்ளவர்கள் மட்டும் தங்கள் மாடுகளை பராமரித்து வருகின்றனர். நிலம் இல்லாமல் வீடுகளில் மாடு வளர்ப்பவர்கள் தீவனம் வாங்க முடியாமல் மாடுகளை விற்கத் துவங்கி விட்டனர். வாரந்தோறும் நடக்கும் மாட்டு சந்தையில் சராசரியாக 300 மாடு, 200க்கும் மேற்பட்ட எருமை மாடுகள் விற்பனைக்கு வரும். நடப்பு வாரம் 400க்கும் மேற்பட்ட பசு மாடுகள், 350க்கும் மேற்பட்ட

எருமை மாடுகள் விற்பனைக்கு வந்தன. பசு மாடுகள் 12 ஆயிரம் முதல் 26 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 14 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. சென்ற காலங்களை விட தற்போது மாடுகள் விலை 1,000 முதல் 2,000 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.
அக்னி வெயில் துவங்க இரண்டு மாதங்களுக்கு முன்னரே தீவனத் தட்டுப்பாடு ஏற்பட்டு, மாடு விற்போர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வெயிலில் தாக்கம் அதிகரிக்கும் போது மாடுகள் வரத்து இன்னும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**மாவுப்பூச்சி தாக்குதல் கோடையில் அதிகரிக்க வாய்ப்பு கட்டுப்படுத்த வேளாண் துறை நடவடிக்கை**

ஈரோடு: கோடை பருவத்தில் மாவு பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகமாகி அனைத்து பயிர்களையும் தாக்கிடும் சூழ்நிலை உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இதை கட்டுப்படுத்த வேளாண் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. சென்றாண்டு மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக ஈரோடு மாவட்டத்தில் மல்பெரி, பப்பாளி, குச்சிக்கிழங்கு, கொய்யா உள்பட பல்வேறு பயிர்கள் பாதிக்கப்பட்டன. பயிர்களின் இலைகளை இப்பூச்சி முற்றிலும் உண்பதால், பயிர்கள் கருகி விளைச்சல் பாதித்தது. நவம்பர் மாதத்தில் பெய்த மழை காரணமாக இயற்கையாகவே இப்பூச்சி தாக்குதல் கட்டுப்பாட்டுக்கு வந்தது. மீண்டும் இப்போது கோடை வெயில் கொளுத்துவதால் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. வெயில் அதிகமாகும் போது இதன் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என வேளாண் துறை எச்சரித்துள்ளது. மாவுப்பூச்சி கட்டுப்பாடு குறித்து ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கோபால் கூறியதாவது: மல்பெரி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மாவுப் பூச்சியை கட்டுப்படுத்த 820 ஹெக்டேர் பரப்பளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால், மல்பெரி பயிரில் மாவு பூச்சி கட்டுப்படுத்தப்படும். எனினும், கோடையில் மாவுப்பூச்சி தாக்கம் அனைத்து பயிர்களிலும் காணப்படும். பப்பாளி, பருத்தி, கொய்யா, காட்டாமணக்கு, அவரை, மரவள்ளி, செம்பருத்தி, எள், நிலக்கடலை, சூரியகாந்தி, வெண்டை, கத்தரிக்காய், தக்காளி மற்றும் மல்பெரி ஆகிய பயிர்களையும், பார்த்தீனியம், துத்தி, சாரணை உட்பட 70க்கும் மேற்பட்ட களை செடிகளையும் இப்பூச்சி தாக்கும்.

மாவுப்பூச்சி தாக்கப்பட்ட பயிர்களில் மஞ்சள் நிறமாக, காய்ந்த, வளைந்த, நெளிந்த மற்றும் வளர்ச்சி குன்றிய குருத்துகள் காணப்படும். மாவு பூச்சிகளுடன் சிகப்பு மற்றும் கருப்பு நிற எறும்புகளின் நடமாட்டமும் இருக்கும். மாவு பூச்சி தாக்கப்பட்ட களை செடிகளை அகற்றி அழித்து விட வேண்டும். எரும்புகளின் நடமாட்டத்தை கவனிக்க வேண்டும். ஒட்டுண்ணி மற்றும் இரை விழுங்கிகள் அதிகம் இருக்கும் போது பூச்சி கொல்லி தெளிப்பதை தவிர்க்க வேண்டும். க்ரிட்டோலேமஸ் மாண்ட்ரோசியரி என்னும் பொறி வண்டு, மூன்று வகை குளவி, ஸ்படலசி, எபியஸ் என்னும் புழு ஆகியவை மாவு பூச்சியை தாக்குகின்றன. இவற்றை சேகரித்து, சேதம் அதிகம் உள்ள இடங்களில் விட்டு அதன் மூலம் மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மாவு பூச்சிகளின் சேதம் குறைவாக இருக்கும் போது, தாவரப் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தாக்கப்பட்ட செடிகள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் மட்டும் தெளித்தல் போதுமானது. வேப்பெண்ணெய் இரண்டு சதம், வேப்பங்கொட்டை பருப்பு சாறு ஐந்து சதவீதம், மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம் மூலம் கட்டுப்படுத்த முடியும். சேதம் அதிகமாக காணப்படும் போது புரோபனோபாஸ், குளோர்பைரிபாஸ், டைமிதோயேட், தயோமீத்தாக்சம், இமிடோகுளோப்ரிட் ஆகிய ரசாயன பூச்சி கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை மீண்டும் செடிகள் முழுவதும் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். பூச்சி மருந்து தெளிக்கும் போது ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி டீபால் அல்லது சாண்டோவிட் ஒட்டும் திரவத்துடன் கலந்து

தெளிக்க வேண்டும். ஒரு பூச்சி கொல்லியை திரும்ப திரும்ப உபயோகிக்காமல், சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சி கொல்லிகளை தேவைக்கேற்ப உபயோகிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**கிராமப்புற பயிற்சி:விவசாயிகள் பயன்**

ஊட்டி:கூடலூர் மாக்கமூலாவில், கிராமப்புற பயிற்சி கூட்டம் நடத்தப்பட்டது.கொய்மலர் சாகுபடி, திட்டப் பணிகள், மானியம், உரமிடல், பயிர் பாதுகாப்பு, பசுந்தேயிலை பறித்தல், கவாத்து செய்தல், தேயிலை, வாழை , காபி, நெல் சாகுபடி, மண்புழு உரம் தயார் செய்தல் குறித்த பயிற்சி, செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.உழவர் பயிற்சி நிலைய தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன், கூடலூர் தோட்டக்கலை அலுவலர் சுரேஷ்ராஜன், துணை வேளாண் அலுவலர் ராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மோகன், மூர்த்தி, அம்பிராஜ் உட்பட 25க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ""வறட்சியிலிருந்து பசுந்தேயிலையை பாதுகாக்க, ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ யூரியா, ஒரு கிலோ பொட்டாஷ் 100 லி., நீரில் கலந்து ஏப்ரல் வரை மாதந்தோறும் தெளிக்க வேண்டும்," என, உபாசி பயிற்சியாளர் அன்பரசு கூறினார்.

**மா சாகுபடி குறித்து விஞ்ஞானி விளக்கம்**

செய்துங்கநல்லூர்: மா சாகுபடியாளர்களுக்கு வேளாண் விஞ்ஞானி யோசனை கூறியுள்ளார். மா மரம் பூத்தவுடன் அதன் இலைகளில் தேன் தெளிக்கப்பட்டது போன்று பிசுபிசுப்பாக இருந்தால் அந்த இலைகளுக்கு மேலுள்ள பூங்கொத்துகளை மா தத்துப்பூச்சி தாக்கியுள்ளது என்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த தத்துப்பூச்சிகள் முட்டைகளை இளங்குருத்துக்கள், பூ கொத்துகள், இலைகளில் துளைத்து வைக்கின்றன. இதனால், முட்டை உட்செலுத்தப்பட்ட பகுதிக்கு மேற்பகுதி வாடிக் கருகிவிடும். மேலும் முட்டையிலிருந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் மற்றும் முழு வளர்ச்சியடைந்த தத்துப்பூச்சிகள் இலைக்குருத்து மற்றும் பூங்கொத்துகளின் சாற்றினை உறிஞ்சுகின்றன.

இதனால் இலைகளில் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகின்றன. இந்த நோயை கட்டுப்படுத்த மா நடவு செய்யும் போதே சிபாரிசு செய்யப்படும் இடைவெளியில் மரங்களை நட வேண்டும், முடிந்தவரை பாதிப்புக்குள்ளான பூங்கொத்துகளை கவாத்து செய்து அகற்றி எரித்து அழிக்க வேண்டும், காய்ந்த சாகுகளை தீயிட்டு மூட்டம் செய்து தாக்குதலை ஓரளவு குறைக்கலாம், ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு லிட்டருக்கு ஒரு கிராம் அசிப்பேட் அல்லது ஒன்றரை மில்லி பாசலோன் அல்லது ஒன்றே கால் மில் மானோகுரோட்டோபாஸ் வீதம் கலந்து ராக்கர் தெளிப்பான் மூலம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். மாலை நேரத்தில் தெளிப்பது நல்ல பலன் தரும். மருந்து கரைசல் இலைகளில் நன்கு படிவதற்காக, சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்துக் கரைசலுக்கு அரை மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பேராசிரியர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி**

செய்துங்கநல்லூர்: கருங்குளம் யூனியன் ஆ பீ ஸில் விவசாயிகளுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டது.செய்துங்கநல்லூரில் அமைந்துள்ள கருங்குளம் யூனியன் ஆபீஸில் 50 விவசாயிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு தூத்துக்குடி எம்பவர் நுகர்வோர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன செயல் இயக்குநர் சங்கர் தலைமை வகித்தார். வட்ட வழங்கல் அதிகாரி முத்துராமலிங்கம், கருங்குளம் யூனியன்

ஆணையாளர் முகமது நசீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜன் ரவிச்சந்திரன் பயிற்சியினை துவக்கி வைத்தார். வேளாண்மை அலுவலர் பூவண்ணன், சங்கர் ஆகியோர் பயிற்சி கொடுத்தனர்.

இப்பயிற்சியில் விவசாயிகளும் ஒரு நுகர்வோர்தான் என்றும், அவர்கள் கொள்முதல் செய்யும் உரம், பூச்சிமருந்து, விதைகள் போன்றவற்றில் விவசாயிகள் கவனிக்க வேண்டியவை குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டது. மேலும் நகைக்கடைகளில் ஹால்மார்க் என்பது என்ன, பொருள்கள் மீது உள்ள எம்.ஆர்.பி.,எடை, தரம், முத்திரை உள்ளிட்ட 20 தலைப்புகளில் குறு படம் திரையிட்டு காட்டப்பட்டது. இப்பயிற்சியில் விவசாயிகளும் நுகர்வோரே என்ற கையேடு வெளியிடப்பட்டது. முடிவில் கருங்குளம் யூனியன் சேர்மன் கோசல்ராம் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இப்பயிற்சியில் மணக்கரை, வசவப்பபுரம், முறப்பநாடு, ராமானுஜம்புதூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கு முன் இதே போன்ற பயிற்சிகள் தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம் யூனியன்களில் நடந்துள்ளது.

இது மூன்றாண்டு பயிற்சியாகும். இப்பயிற்சியில் யூனியன் சேர்மனுடன் வி.கோயில்பத்து பஞ்.,தலைவர் பால்ராஜ், தெற்குகாரசேரி பஞ்.,தலைவர் சுடலைமுத்து, முத்தலாய்குறிச்சி பஞ்.,தலைவர் கந்தசாமி உட்பட பலர் செய்திருந்தனர்.

**கால்நடை பராமரிப்புவிழிப்புணர்வு முகாம்**

தேவர்குளம்:தோனுகால் கிராமத்தில் கால்நடை பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது.நபார்டு பாங்க், பனவடலிசத்திரம் இந்தியன் ஓவர்சிஸ் பாங்க், அன்னை சவுபாக்கியா தொண்டு நிறுவனம் ஆகியவை இணைந்து தோனுகால் கிரமத்தில் கால்நடை பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாமை நடத்தினர். தொண்டு நிறுவன நிர்வாகி ஸ்வர்ணா தலைமை வகித்தார். ஜெயப்பிரகாஷ் முன்னிலை வகித்தார். மாரிராஜ் வரவேற்றார். நபார்டு பாங்க் உதவி பொது மேலாளர் சுரேஷ் சிறப்புரையாற்றினார்.

முகாமில் இந்தியன் ஓவர்சிஸ் பாங்க் மண்டல மேலாளர் மற்றும் முதுநிலை மேலாளர் சந்திரபோஸ், கீழநீலிதநல்லூர் கிளை மேலாளர் முத்து, சங்கரன்கோவில் ஆவின் மேலாளர் வெள்ளத்துரை உட்பட பலர் கறவை மாடு கால்நடை பராமரிப்பு பற்றி பேசினர். கீழநீலிதநல்லூர் ஐ.ஓ.பி.வழங்கிய கறவை மாடு கடன், பாங்க் பாஸ் புத்தகம் ஆகியவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.முகாமில் தொண்டு நிறுவன களப்பணியாளர்கள் சொக்கலிங்கம், முத்துச்செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர். வேலுச்சாமி நன்றி கூறினார்.

**சொட்டு நீர்பாசன வசதி ரூ.25,000 மானியம்**

சிவகாசி: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 எக்டேரில் சொட்டு நீர்பாசன வசதி செய்யும் திட்டம் உள்ளது. ஒரு எக்டேரில் சொட்டு நீர் பாசன வசதி செய்ய 82 ஆயிரம் ரூபாய் செலவாகும். இதில் விவசாயிகளின் பங்கு தொகையாக 35 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும். அரசின் மானியமாக 15 ஆயிரம் ரூபாய்க்கு நீரில் கரையும் உரம், 5,000 ரூபாய் மதிப்பிலான கத்திரி, வெண்டை, தக்காளி விதைகள், 5000 ரூபாய்க்கு பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். சொட்டு நீர்பாசன வசதி செய்ய விரும்பும் விவசாயிகள், சிவகாசி தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம்.

**தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தல்**

திருப்பூர்: "திருப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட கிராமங்களில் இந்தாண்டு சின்ன வெங்காயம் அபரிமிதமாக விளைந்துள்ளது; இருப்பு வைத்து பயன்படுத்தவும், வெளிமாநிலங்களில் விற்பனை செய்யவும் அரசு தரப்பில் வசதி செய்ய வேண்டும்' என்று விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; கலெக்டர் சமயமூர்த்தி தலைமை வகித்தார்.

விவசாயிகள் தெரிவித்த குறைகள்:குடிமங்கலம் பகுதியில் விவசாய இடுபொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. சாண எரிவாயு கலன் அமைக், அரசு தரப்பில் போதிய ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை. பாசன கால்வாய்களில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால், கரும்பு போன்ற பயிர்கள் சாகுபடியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மின் வினியோகத்தில், நான்கு மணி நேரத்திற்கும் அதிகமாக தடை செய்யப்படுவதால், விவசாய பணிகள் பாதிப்பதோடு, மின் மோட்டார்களும் பழுதடைகின்றன. விவசாயத்துக்கான மின் வினியோகத்தை சீரமைக்கவும், மும்முனை மின்சாரம் வழங்கவும் உயர்மட்ட அதிகாரிகளை ஒருங்கிணைத்து ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும்.பொங்கலூர் பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். கொப்பரை கொள்முதலை பொருத்தவரை விவசாயிகள் பெயரில் வியாபாரிகளே பயனடைகின்றனர். எனவே, நேரடியாக தேங்காய் கொள்முதலை அரசு துவக்க வேண்டும். நொய்யலில் சாயக்கழிவு கலந்ததால், விவசாயம் பெருமளவு பாதித்துள்ளது; பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு இன்னும் கிடைக்கவில்லை.

பொங்கலூர், கொடுவாய், முத்தூர் போன்ற கிராமங்களில் இந்த ஆண்டு சின்ன வெங்காயம் விளைச்சல் அபரிமிதமாக உள்ளது. ஆனால், அவற்றை இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியாத நிலை இருப்பதால், ஒரு கிலோ வெங்காயம் ஆறு ரூபாய் வரை விலை குறைந்துள்ளது.தேவைக்கு போக, அதிகப்படியான வெங்காயத்தை இருப்பு வைக்க குடோன் வசதி, வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பவும் அரசு தரப்பில் ஏற்பாடு செய்ய வேண்டும். முத்தூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தேங்காய் விளைச்சல் அதிகம் உள்ளது. இங்குள்ளவர்கள், பல்லடம் சந்தைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே, முத்தூரிலேயே கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன், குள்ளம்பாளையத்தில் மர்ம நோய் தாக்கி 70க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்துள்ளன. கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்ய வேண்டும். கோடை காலத்தில், கால்நடைகள் அதிகமாக நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. எனவே, இந்த சீசனில் தடுப்பூசி போடுவதற்கு கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும்.

உடுமலையில் அமராவதி ஆயக்கட்டு பகுதிகளில் தற்போது, நெல் அறுவடை தீவிரமாகியுள்ளது. இங்கு, அரசு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். தாராபுரம் பகுதியில் தனியார் வியாபாரிகள், ஒரு கிலோ நெல் 10 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். அரசு சார்பில் துவங்கப்பட்டுள்ள நெல் கொள்முதல் நிலையத்தில் கிலோவுக்கு 11 ரூபாய் வழங்கப்படுகிறது; எடைக்கூலி கிலோவுக்கு 60 பைசா வசூலிக்கப்படுகிறது. இதனால், கூடுதல் விலை கொடுத்தும் பயனில்லை; எடை கூலியை குறைக்க வேண்டும், என்பன போன்ற குறைகளை முன் வைத்தனர்.

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கருத்துக்களை கேட்டு, கலெக்டர் சமயமூர்த்தி பேசியதாவது:விவசாய இடுபொருட்கள் விற்பனையை கண்காணிக்க, அதிகாரிகளுக்கு

அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சாண எரிவாயு கலன் அமைக்க, அரசு வழங்கும் மானியம் பயனாளிகளுக்கு முறைப்படி வழங்கப்படுகிறது.

பாசன கால்வாய்களில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு, நெல்லுக்கு தேவையான தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு போன்ற நீண்ட காலப்பயிர்களுக்கு தண்ணீர் தேவை இருப்பின், பாசனத்திற்கான வாய்ப்பை ஆராய்ந்து வழங்கப்படும்.பொங்கலூரில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் குடோன் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், திருப்பூர் மாவட்ட கிராமங்களில், சின்ன வெங்காயம் உற்பத்தியை அதிகாரிகள் கணக்கிட்டு மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். அதன் அடிப்படையில், விவசாயிகளின் கோரிக்கை அரசுக்கு பரிந்துரைக்கப்படும்.

70க்கும் மேற்பட்ட ஆடுகள் பலியான கிராமத்தில், கால்நடைத்துறையினர் ஆய்வு நடத்தியுள்ளனர். கால்நடைகளை இன்சூரன்ஸ் செய்திருந்தால், இழப்பீடு கிடைக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் சிறப்பு கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வங்கிக்கடன் வழங்க பரிந்துரைக்கப்படும். அமராவதி ஆயக்கட்டு பகுதியில், நெல் கொள்முதல் நிலையம் அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு, சமயமூர்த்தி தெரிவித்தார்.

**விதை மஞ்சள் எடுக்கும் போது, உஷார் : எச்சரிக்கிறது தோட்டக்கலைத்துறை**

திருப்பூர்: இந்தாண்டு, மஞ்சள் பயிரில் நல்ல விளைச்சல் மற்றும் லாபம் கிடைத்ததால், அதிகளவில் பயிரிட விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். விதை மஞ்சள் வாங்கும் போது, அதிக கவனம் செலுத்த வேண்டும் என தோட்டக்கலை அறிவுறுத்தியுள்ளது.திருப்பூரில் மஞ்சள் அறுவடை முடியும் தருவாயில் உள்ளது. இந்தாண்டு மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்ததால், விவசாயிகள் இடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மகசூலும் நன்றாக உள்ளதால், வருங்காலங்களில் அதிகளவில் பயிர் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

மஞ்சள் விளைச்சல் குறித்து விவசாயிகள் கூறியதாவது:கடந்தாண்டை விட, இந்தாண்டு மஞ்சள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. விலை அதிகமாக இருப்பதால், சந்தையில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மஞ்சளும், வெங்காயமும் ஊடுபயிராக விளைவிப்பதால், செலவு குறைகிறது. ஒரு குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரம் வரை விற்பனையாகிறது.

ஏக்கருக்கு, சாதாரணமாக 15 முதல் 20 குவிண்டால் விளைச்சல் தரும்; அதிகபட்சமாக 30 குவிண்டால் வரை விளைச்சலை எதிர்பார்க்கலாம். இந்தாண்டு நல்ல பக்குவம் செய்த விவசாயிகளுக்கு, 20 குவிண்டாலில் இருந்து 30 குவிண்டால் வரை மகசூல் கிடைத்துள்ளது. ஏக்கருக்கு 40 ஆயிரம் வரை முதலீடு செய்ய வேண்டும். முதலீடு, இதர செலவு தவிர, நல்ல மகசூலும், விலையும் கிடைத்துள்ளதால், ஏக்கருக்கு ஒரு லட்சம் வரை லாபம் கிடைத்துள்ளது.திருப்பூர் சுற்றுவட்டாரத்தில் மஞ்சள் மற்றும் வெங்காயம் அதிகளவில் பயிரிடுகின்றனர். வெங்காயத்தில் விலை வீழ்ச்சி ஏற்பட்டு, நஷ்டம் தரும் சூழல் உள்ளது. வெங்காயம் ஒருபுறம் நஷ்டம் தந்தாலும், மஞ்சள் அதை ஈடு செய்துள்ளது. மஞ்சள் பயிரில் எதிர்பார்த்த மகசூலும், விலையும் கிடைத்ததால், வரும் நாட்களில் மஞ்சள் பயிரிடுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.வரும் நாட்களில் மஞ்சள் பயிரை அதிகளவில் பயிரிட திட்டமிட்டு, விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதை மஞ்சளை சேகரித்து வருகின்றனர். ஆனால், விதை மஞ்சளை செதில் பூச்சிகள் தாக்கி,

விதையின் தரத்தை குறைத்து விடும் அபாயம் இருக்கிறது. எனவே, விதை மஞ்சளுக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தோட்டக்கலைத்துறை அறிவுறுத்தியுள்ளது.

தோட்டக்கலை துறை அதிகாரி சந்தானகிருஷ்ணன் கூறியதாவது:எதிர்காலத்தில் அதிகளவில் பயிரிடுவதற்காக, தேவையான விதை மஞ்சளை எடுத்து வைக்கின்றனர். பூச்சி மற்றும் நோய் தாக்கப்படாத, அழுகல் இல்லாத, பச்சை மஞ்சளை விதைக்கு எடுக்க வேண்டும். நல்ல காற்றோட்டமான, நிழல் பகுதியில் மஞ்சள் பயிரை பாதுகாக்க வேண்டும். செதில் பூச்சிகள் விதை மஞ்சளை அதிகளவில் தாக்கி, அதில் உள்ள சாற்றை ஊறிஞ்சும் நிலை உள்ளது.

ஒரு லிட்டர் தண்ணீரில் 4 மி.லி., விகிதத்தில் "பாசலோன்' என்ற பூச்சிக்கொல்லி மருந்தில், 30 நிமிடம் ஊற வைக்க வேண்டும்; நிலப்பரப்பு மீது படாமல், படல் போன்றவற்றின் மூலம் ஒரு அடி உயரத்தில் வைக்க வேண்டும். விதை மஞ்சளுக்கு நல்ல காற்றோட்டம் கிடைப்பது அவசியம். அதிக கவனம் செலுத்தி, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு விதை மஞ்சளை தயார் செய்ய வேண்டும்.தேசிய தோட்டக்கலை துறை மூலம், தோட்டக்கலை துறை சார்பில் மஞ்சள் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு 11,250 ரூபாய் வரை மானியம் அளிக்கப்படுகிறது. மஞ்சள் பயிரிடும் விவசாயிகள், தங்களுக்கு தேவையான சந்தேகங்களை தோட்டக்கலை துறையில் தெரிந்து கொள்ளலாம், என்றார்.

**விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு செயல்விளக்கம்**

உடுமலை: ஆத்மா திட்டத்தின் கீழ் பட்டு வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்க செயல்விளக்க முகாம் மற்றும் இடுபொருட்கள் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.குடிமங்கலத்தில் நடந்த கூட்டத்தில் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். உதவி ஆய் வாளர் குலாம்முகமது வரவேற்றார்.மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி புனிதவதி பேசியதாவது:விவசாயம் சார்ந்த தொழில்களில் பட்டு வளர்ப்பு தொழில் விவசாயிகளுக்கு லாபகரமானதாக உள்ளது. மல்பெரி நடவு முதல் பட்டுப்புழு வளர்ப்பிற்கு தேவையான ஆலோசனைகளும், மானியங்களும் மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படுகின்றன.

பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க விவசாயிகள் ஒருங்கிணைந்து நோய் தடுப்பு பணிகளை மேற் கொள்ள வேண்டும். நோய் தாக்குதல் துவங்கியதும் சம்மந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு தகவல் அளிக்க வேண்டும். நோய்த்தாக்குதலை கட்டுப்படுத்த தேவையான ஆலோசனைகள் விவசாயிகளுக்கு உடனடியாக அளிக்கப்படும்.விவசாயிகளிடையே பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் குறித்த விழிப்புணர்வு இருந்தால் பிற பகுதிகளுக்கு நோய் பரவுவதை எளிதில் தடுக்க முடியும் என்றார்.விவசாயிகளுக்கு மானியத் திட்டத்தில் கிருமிநாசினிகள் வழங்கப்பட்டன. விவசாயிகள் மற்றும் அதிகாரிகளிடையே தொழில் நுட்ப கருத்து பரிமாற்றம் நடந்தது.

**வேளாண் பண்ணை பள்ளி துவக்கம்**

அவிநாசி: சேவூர் அருகே வேளாண் பண்ணை பள்ளி துவக்கப்பட்டது.சேவூர் அருகே போலநாயக்கன்பாளையத்தில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டத்தில், வேளாண் பண்ணை பள்ளி துவக்கப்பட்டது; அவிநாசி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் சண்முகம் தலைமை வகித்தார். வேளாண் பள்ளியின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து அவிநாசி கால்நடை உதவி மருத்துவர் பரிமள ராஜ்குமார் விளக்கினார்.

கால்நடை பராமரிப்பில் மேலாண்மை, நோய் பாதுகாப்பு, தடுப்பூசி முறை குறித்து கோவை நோய் புலனாய்வுத்துறை கால்நடை உதவி மருத்துவர் சங்கர், தொழில்நுட்ப கருத்துரை வழங்கினார்.வேளாண் பள்ளியில் கால்நடை வளர்ப்போரின் பராமரிப்பு பிரச்னை, எதிர்காலத்தில் தேவையான செயல்முறை விளக்க தேவை குறித்து விவாதித்து பள்ளியின் கால அட்டவணை தயார் செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. விவசாயிகள் கேட்ட சந்தேகங்களுக்கு மருத்துவர்கள் சாமிநாதன், �ஷாபனா, தேவிப்பிரியா விளக்கினர்.அவிநாசி வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன், வேளாண் அலுவலர் விவேகானந்தன் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு ரூ.77 கோடி கடன்: கூட்டுறவு வங்கி அதிகாரிகள் தகவல்**

திருப்பூர்: "கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட 180 சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு, மொத்தம் 77 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது' என, திருப்பூரில் நடந்த விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தில் கூட்டுறவு வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; கலெக்டர் சமயமூர்த்தி தலைமை வகித்தார். விவசாய அமைப்புகளின் நிர்வாகிகளும், விவசாயிகளும் குறைகளை தெரிவித்தனர். கூட்டம் துவங்கியதும், விவசாய கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு கடன்கள் பற்றி விவாதிக்கப்பட்டது.

கூட்டுறவு வங்கி அதிகாரிகள் கூறியதாவது:கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் 180 சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு, 77 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில், 26.60 கோடி ரூபாய் அடமான கடனாகவும், 23.50 கோடி ரூபாய் நபர் கடனாகவும், 27 கோடி ரூபாய் நகை கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 2006-07ல் 13 லட்சம் ரூபாய்; 2007-08ல் 23 லட்சம் ரூபாய்; 2008-09ல் 18 லட்சம் ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தாண்டுக்கான பயிர் கடன் இன்னும் வழங்கப்படவில்லை, என்று தெரிவித்தனர்."வசதி படைத்தவர்களும், நகை வைத்திருப்பவர்களும் மட்டுமே விவசாயிகள் பெயரில் பயிர் கடன் பெறும் நிலை உள்ளது. அதிகாரிகளால், கடன் வரம்பும் குறைவாக மதிப்பிடப்படுகிறது' என்று பயிர் கடன் வழங்குவதில் உள்ள குறைபாடுகளை விவசாயிகள் கூறினர்.இதற்கு பதிலளித்த கலெக்டர் சமயமூர்த்தி, ""விவசாய கூட்டுறவு வங்கிகள் முன், பயிர் கடன் வழங்கும் நெறிமுறைகளை எழுதி வைக்க, சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பயிர் கடன் பற்றிய விபரங்களை, பத்திரிகைகளில் செய்திகள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு தெரியப்படுத்த ஏற்பாடு செய்யப்படும். இந்த ஆண்டுக்கு கூடுதலான பயிர் கடன் வழங்க, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்,'' என்றார்.

**.மானியத்தில் மின் மோட்டார் விவசாயிகளுக்கு வினியோகம்**

திருப்பூர்: வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும், பழைய மின் மோட்டாருக்கு பதிலாக புதிய மோட்டார் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தில், திருப்பூரில் 32 விவசாயிகளுக்கு 2.94 லட்சம் ரூபாய் மதிப்புள்ள புதிய மின் மோட்டார் நேற்று வழங்கப்பட்டது.வேளாண் பொறியியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை:மின்சாரத்தை சேமிக்கும் வகையில், பழைய மின் மோட்டார்களுக்கு பதிலாக, ஐ.எஸ்.ஐ., முத்திரையுடன் கூடிய மின் மோட்டார் வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், திருப்பூர் மாவட்டத்துக்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மானியம் வழங்கப்பட்டுள்ளது.உடுமலை வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அக்கோட்டத்துக்கு 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தில், 32 விவசாயிகளுக்கு 2.94 ரூபாய் மானியத்தில், பழைய மின் மோட்டாருக்கு பதிலாக புதிய மின் மோட்டார் வழங்கப்பட்டது. இதுவரை இம்மாவட்டத்தில் 23 லட்சம் ரூபாய் மானியத்துக்கான பணி உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன, என்று கூறப்பட்டுள்ளது.

**தேவைப்பாடு அதிகரிப்பால் இயற்கை ரப்பர் விலை ரூ.145–ஐ தாண்டியது**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*உள்நாட்டில் இயற்கை ரப்பரின் விலை கடந்த ஒரு சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லாததால் விலை உயர்ந்து வருவதாக இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.*
*கொச்சி சந்தையில்...*

சென்ற வியாழக்கிழமை அன்று கொச்சி ரப்பர் சந்தையில் ஒரு கிலோ இயற்கை ரப்பரின் விலை ரூ.145.25–ஆக அதிகரித்து இருந்தது. நடப்பு மார்ச் மாதம் 1–ந் தேதி இதன் விலை ரூ.142.50–ஆக இருந்தது. ஆக, தற்போதைய ரூ.145 என்ற விலை வரலாறு காணாத உயர்வாக கருதப்படுகிறது.

கேரளாவில், அதிக அளவில் ரப்பர் உற்பத்தியாகும் பகுதிகளில் வறட்சி நிலை காணப்படுவதால் உற்பத்தி குறைந்து போயுள்ளது. அதேசமயம், இதற்கான தேவைப்பாடு மிகவும் அதிகரித்துள்ளது.

உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும் ரப்பருக்கான தேவைப்பாடு மிகவும் அதிகரித்துள்ளது.

வெளிநாடுகளிலும் ரப்பர் உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. இதனால், சர்வதேச சந்தைகளிலும் இதன் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அளிப்பு குறைந்தது

இது குறித்து கொச்சி ரப்பர் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் என்.ராதாகிருஷ்ணன் கூறும்போது, "ரப்பர் விலை அதிகரிக்கும் நிலை மேலும் சில நாள்களுக்கு நீடிக்கும். சர்வதேச அளவிலும் ரப்பர் அளிப்பு குறைந்து போயுள்ளது. இதன் காரணமாகவே இயற்கை ரப்பர் விலை உயர்ந்து வருகிறது. இருப்பினும், நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ரப்பர் உற்பத்தி சென்ற ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்திருந்தது. இந்த நிலையிலும் இதன் விலை உயர்ந்துள்ளது" என்று தெரிவித்தார்.

நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான 11 மாத காலத்தில், 7,80,750 டன் ரப்பர் உற்பத்தியாகி உள்ளது. இருப்பினும், சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது, ரப்பர் உற்பத்தி 4.34 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம், இக்காலத்தில் ரப்பர் பயன்பாடு 7 சதவீதம் அதிகரித்துள்ளது என ரப்பர் வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறக்குமதி

இதே காலத்தில், ரப்பர் இறக்குமதி 122 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால், வரும் நிதி ஆண்டில், ரப்பர் இறக்குமதி இந்த அளவிற்கு இருக்காது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், சர்வதேச சந்தையில், ரப்பரின் விலை, உள்நாட்டை விட அதிகமாக உள்ளது. குறிப்பாக, கடந்த ஒரு வார காலத்தில், சர்வதேச சந்தையில் ரப்பரின் விலை படிப்படியாக அதிகரித்து, சென்ற வியாழக்கிழமை அன்று ஒரு கிலோ ரப்பரின் விலை ரூ.148.59–ஆக உயர்ந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த 2011–12–ஆம் நிதி ஆண்டில் யூரியா உரத்திற்கான தேவை 2.88 கோடி டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

அடுத்த 2011–12–ஆம் நிதி ஆண்டில், உள்நாட்டில் யூரியா உரத்திற்கான தேவைப்பாடு 2.88 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், இதற்கான தேவை சுமார் 2.67 கோடி டன்னாக இருந்தது. இதனை, மத்திய ரசாயன மற்றும் உரத் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜேனா மக்களவையில் தெரிவித்தார்.

உற்பத்தி

உள்நாட்டில் யூரியா உர உற்பத்தியும் ஓரளவு அதிகரித்து வருகிறது. கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் யூரியா உற்பத்தி 1.98 கோடி டன்னாக இருந்தது. இது, சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், 1.99 கோடி டன்னாக சற்று உயர்ந்தது. யூரியா உற்பத்தி, நடப்பு நிதி ஆண்டில் 2 கோடி டன்னாகவும், வரும் 2010–11–ஆம் நிதி ஆண்டில் 2.17 கோடி டன்னாகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


உள்நாட்டில் உற்பத்தி குறைந்த அளவிலேயே அதிகரித்து வரும் நிலையில், தேவைப்பாடு மிகவும் அதிகமாக உள்ளதால் இறக்குமதியை சார்ந்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. எனினும் மூன்று நிதி ஆண்டுகளாக இறக்குமதி குறைந்து வருகிறது. கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் யூரியா இறக்குமதி 69.28 லட்சம் டன்னாக

இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் 56.67 லட்சம் டன்னாக இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரி மாதம் வரையில் 50.18 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான பத்து மாதங்களில் நம் நாட்டில் 2.51 கோடி டன் யூரியா பயன்படுத்தப்பட்டுள்ளது. உத்தரபிரதேசம், பஞ்சாப், மகாராஷ்ரா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் யூரியா பயன்பாட்டில் முன்னிலையில் உள்ளன.

விரிவாக்க நடவடிக்கை

இஃப்கோ, நாகார்ஜுனா பெர்டிலைசர்ஸ் மற்றும் டாட்டா கெமிக்கல்ஸ் ஆகிய நிறுவனங்கள் உர உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எரிவாயு ஒதுக்கீடு, விரிவாக்கம் மற்றும் நலிவடைந்த ஆலைகளை சீரமைத்தல் போன்றவற்றில் உர உற்பத்தி துறைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
அண்மையில், மத்திய அரசு இத்துறையில் சத்து சார்ந்த மானியக் கொள்கையை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தது. எனினும். சில்லரை விற்பனையில், ஒரு டன் யூரியா உரத்தின் விலையை ரூ.5,310–ஆக உயர்த்தியுள்ளது. இது, ஏப்ரல் 1–ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது. தற்போது ஒரு டன் யூரியா விலை ரூ.4,830–ஆக உள்ளது.

## அமெரிக்காவில் பொருள் குவிப்பு வரி இந்தியாவின் இறால் ஏற்றுமதியில் பாதிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொச்சி

நம் நாட்டின் இறால்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அமெரிக்காவின் வர்த்தக துறை , அந்நாட்டில் இறக்குமதியாகும் இறால்கள் மீது 2.67 சதவீத பொருள் குவிப்பு வரி விதித்துள்ளது. இதனால், இந்தியா, சீனா, வியட்நாம், தாய்லாந்து, பிரேசில் மற்றும் ஈக்வடார் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு மேற்கொள்ளப்படும் இறால் ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகும் என இந்திய இறால் ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2004–ஆம் ஆண்டில், அமெரிக்க வர்த்தக துறை, நிர்வாக ஆய்விற்கு பிறகு இறால் இறக்குமதி மீது 10.17 சதவீத அளவிற்கு பொருள் குவிப்பு வரி விதித்தது. மறு பரிசீலனைக்கு பிறகு இந்த வரி விகிதம் 7.22 சதவீதமாகவும், அதன் பின் 0.79 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது.
அமெரிக்க வர்த்தக துறை, பொருள் குவிப்பு வரி விகிதத்தை மேலும் குறைக்கும் என்று எதிர்பார்த்து வந்த வேளையில், 2.67 சதவீதமாக உயர்த்தி உள்ளது. இதனால், அமெரிக்காவிற்கான இந்திய இறால் ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

**கூடலூரில், பாகற்காய் விவசாயம் செய்யும் பணி தொடங்கியது**



கூடலூர் தோட்டமூலா பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பாகற்காய் கொடிகள்.

*கூடலூர், மார்ச்.13–*

*கூடலூர் பகுதியில் பாகற்காய் விவசாயம் செய்யும்பணி தொடங்க பட்டுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் அளவில் பாகற் காய் பயிரிடப்பட்டுள் ளது.*

*சமவெளி காய்கறிகளும்*

*நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம். இயற்கை எழில் சூழ்ந்த அழகிய தேயிலை தோட்டங்கள் நிறைந்த மாவட்டமாக விளங்கி வரு கிறது. மாவட்டத்தில் உள்ள ஊட்டி, குன்னூர், கோத்தகிரி , நடுவட்டம்ஆகிய பகுதிகளில் அதிகளவு மலை பயிர்களான முட்டைகோஸ், கேரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ் உள்ளிட்ட மலைப் பயிர்கள் விளைவிக்கப்படு கின்றன.*

*கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் மலை பயிர்களுக்கு இணையாக சமவெளி பிர தேசங்களில் விளையக்கூடிய பாகற்காய், புடலங்காய், நெல், தர்பூசணி, வெள்ளரிக்காய் உள்ளிட்ட பயிர்கள் விளை விக்கப்படுகின்றன. ஒவ்வொரு பயிர்களுக்கும் ஒவ்வொரு காலங்களில் விளைவிக்கப் படுகிறது.*

*பாகற்காய் பயிரிடும் பணி தொடக்கம்*

*தற்போது கூடலூர், பந்த லூர் தாலுகாவில் கோடை வெயில் வாட்டி எடுத்து வரு கின்றன. இதனால் வெயில் காலங்களில் விளையக்கூடிய பாகற்காய் பயிரிடும்பணி கூடலூர் பகுதி விவசாயிகள் தொடங்கி உள்ளனர். மண் வயல், புத்தூர் வயல், 2–வது மைல், மசினகுடி, கூடலூர், பந்தலூர் பகுதியில் கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பாகற்காய் விதை நடப்பட்டது.*

*தற்போது பாகற்காய் செடிகள் முளைத்து கொடி பரவ தொடங்கி உள்ளதால் பாகற்காய் செடிகள் பரவி வளருவதற்கு ஏற்ப கொடிக் கால் நடப்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான இடங்களில் பாகற்காய் கொடிகளை காணமுடிகிறது. வருகிற மே மாதம் பாகற்காய் விளைச்சல் ஏற்பட்டு விடும். பின்னர் அறுவடை செய்து கேரளா மாநிலங்களுக்கு அதி களவு ஏற்றுமதி செய்யப்படும் என விவசாயி ஒருவர் தெரிவித்தார்.*